# கல்கி

நிறுவனர்

22-9-68

விலை 20 காசு

# சாதாரண நோய்களிலிருந்து நிம்மதியான நிவாரணம் பெற...



**ஜலதோஷம் :**
மூக்கின் மேலும் உட்புறத்திலும் அமிர்தாஞ்சனத்தை தடவவும். சிறிதளவு அமிர்தாஞ்சனத்தை கொதி நீரில் கரைத்து அதன் நெடியை நுகரவும்.

**மார்ச்சளி :**
மார்பு மற்றும் முதுகு, கழுத்துப் புறங்களில் அமிர்தாஞ்சனத்தை சூடுபெறத் தேய்க்கவும்.

# அமிர்தாஞ்சனம்

75 வருடங்களுக்கும்
மேலாக புகழ் வாய்ந்தது

AMR-3 a

தான் உணர்கின்ற அற முறையினின்றும் பிறழாது, அறமுறைக்கு மாறுபட்ட தீமைகளையும் களைந்து, வீரத்தின் வழுவாத வலிமையினையும் உடையதுதான் ஆட்சிச் சிறப்புக்குரியதாகும். —வள்ளுவம் (384)


# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 22—9—68 இதழ் 9


# கேரள காது-கேட்காது!

மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக, கேரள அரசின் போக்கு கண்டு திடுக்கிட வேண்டியதாகவே இருக்கிறது. இத்திங்கள் 19-ஆம் நாள் மத்திய அரசு ஊழியர்கள் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவெடுத்ததும், அதனைத் தடுக்கும் நோக்கத்தோடு மத்திய அரசு ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்தது, வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்பதுடன், வேலைநிறுத்தம் செய்யத் தூண்டுவதும்கூட தண்டனைக்குரிய குற்றம் என்று அறிவித்திருக்கிறது.

ஒரே ஒருநாள்தான் மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் என்றாலும், அதன் விளைவாக கோடிக்கணக்கான ரூபாய்கள் இழப்பு என்பதனை புள்ளி விவரம் மூலமாக மத்திய அரசு வெளியிட்டிருக்கிறது.

தனியார் துறையினர் இதுபோல் வேலை நிறுத்த முயற்சிகளி லீடுபடுவதையே விரும்பத்தகாதது என்று கூறப்படுகிறபோது அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதை எப்படி அனுமதிக்க முடியும்?

வேலை நிறுத்தம் என்பது, தொழிலாளர்களுக்குத் தங்கள் உரிமைகளைப் பெற, அனுமதிக்கப்பட்டுள்ள கடைசி போராட்ட ஆயுதம்.

வேலை நிறுத்தம் அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான் என்றாலும், நாட்டின் பொதுச் சூழ்நிலைகளையும் இணைத்துப் பார்க்கிறபோது மத்திய அரசின் அவசரச் சட்டம், இந்த சந்தர்ப்பத்தில் மிகவும் வரவேற்கக் கூடியதாகும்.

மத்திய அரசின் ஒரு சட்டத்தை மாநில அரசுகள் நிறைவேற்றித் தருகின்ற ஒரு பொறுப்பை அரசியல் சட்டம், தன் 256-வது விதி மூலம் தெளிவுபடுத்திக் காட்டுகிறது.

மாநில அரசு. தன் உரிமைகளையும் தேவைகளையும் கேட்டு மத்திய அரசுடன் போராடுவது என்பது வேறு. மத்திய அரசுடன் ஒத்துழைக்காமல் இருப்பது என்பது வேறு.

மாநில அரசின் பதவிப் பொறுப்புக்கு வரும்போதே, மாநில அரசின் அதிகார வரம்பை நிர்ணயிக்கிற அரசியல் சாசனத்தையும் ஒப்புக்கொண்டுவிடுகிறார்கள் என்பதுதான் நடைமுறை. இதனை ஒப்புக்கொண்டுதான்—ஒப்புக்கொண்ட பின்னர்தான்—உரிமைகள் மிகுதியும் தேவை என்று போராட்டம் நடத்துவதற்கு அனுமதியேகூட கிடைக்கிறது.

ஆனால் மாநில அரசு, மத்திய அரசுடன் ஒத்துழைக்காத நிலையில் தன் கொள்கையை வகுத்துக்கொண்டு செயல்படுமானால், அந்த மாநிலம் மத்திய அரசின் பிடியிலிருந்து விலகிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதுதான் பொருளாகும்.

கேரளாவைப் பொறுத்தமட்டில், மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பாக, எடுத்திருக்கிற முடிவு — அது துண்டித்துக்கொண்டு போகவிருக்கும் பேராபத்தை எடுத்துக்காட்டும் ஒரு முன்னோடிச் செயலாகத்தான் எண்ணவேண்டி இருக்கிறது.

மத்திய அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதை, வரவேற்றிருப்பதோடு, ஊக்கம் தரும் வகையில் நடவடிக்கைகளை வேறு, கேரள ஆளும் கட்சி ஏற்பாடு செய்திருக்கிறது.

வேலை நிறுத்தத்தை ஊக்குவிப்போரும், மறியல் போன்றவற்றில் ஈடுபடுவோரும் பணியாற்றுபவரைத் தடுப்போரும் இதுபோன்ற எல்லா வகையினரும் கைது செய்யப்பட வேண்டியவர்கள். அத்தகையோர் மீது சட்டப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு, மாநில அரசு உதவ கடமைப்பட்டிருக்கிறது.

கேரள அரசின் ஒத்துழையாமை முயற்சியின் மூலம் தன் கடமையைப் புறக்கணித்துவிட்டிருப்பதோடு, குற்றவாளிகள் பட்டியலில் தன் பெயரும் இருக்கும்படியான காரியங்களிலும் கேரள அரசு ஈடுபட்டிருக்கிறது.

நல்லவேளையாக, மத்திய அரசின் உடமைகளுக்குப் பாதுகாப்புத் தரப்படும் என்று கேரள முதல்வர் அறிவித்திருக்கிறார். அதே வேளையில் கேரள கம்யூனிஸ்டுகள் மத்திய அரசு ஊழியர்களுடன் சேர்ந்து மறியல் போன்றவற்றில் ஈடுபடவிருப்பதாகவும் அறிவித்திருக்கின்றனர்.

திரு. நம்பூதிரிபாடு அவர்களது இந்த உத்திரவாதம் எந்த அளவுக்குச் செயல்பட்டிருக்கிறது என்று அறிந்துகொள்ளு முன்னர் இந்த இதழ் அச்சாகிவிடக் கூடும்.

கேரள அமைச்சர்களில் நான்கு பேர் மட்டுமே வேலை நிறுத்தத்தை வரவேற்றிருப்பதுடன் ஊக்கமும் தந்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறபோது, அது முழு அமைச்சரவையின் முடிவாக எப்படி ஆனது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மத்திய அரசு ஊழியர்களின் விவகாரத்தில் மட்டும் இந்த அளவுக்கு அக்கறையும் ஊக்கமும் காட்டும் கேரள அரசு, தன் மாநில அரசு ஊழியர்கள் விவகாரத்தில் கடந்த ஆண்டு எப்படி நடந்துகொண்டிருக்கிறது?

அரசுத் துறை எஞ்சினியரிங் ஊழியர்கள் கடந்த ஆண்டு வேலைநிறுத்தம் செய்தபோது, தடுப்புக் காவல்

# காஞ்சி

## 4-ம் ஆண்டு மலர்

வந்தால்-தந்தால்-தருவேன்!

(அமைச்சர் மா. முத்துசாமி)

அரிமா நோக்கு!

(என். வி. நடராசன்)

விரலுக்குத் தக்க வீக்கம்!

(மா. கி. தசாதன்)

எனது பயணம்!

(அரங்கண்ணல்)

மெய்யறிவு!

(அ. மு. பரமசிவானந்தம்)

இரவு என்ற குருவி!

(சோமு)

ஆகா! ஜப்பான்!

(அண்ணல்)

இரட்டைக் கொலை!

(எஸ். எஸ். தென்னரசு)

பெருங்காட்டு கதை

—தில்லைவில்லாளன், எம். ஏ., எம். பி.

காங்கிரஸ் அகில இந்தியக் கட்சியா?

— எஸ். ஆர்.

முதலான கருத்துக் கருவூலங்களோடு

அறிஞர் அண்ணாவின்

அமெரிக்கப் பயணத்தில்...!

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம், I.A.S. அவர்களது புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்.

அறிஞர் அண்ணா அவர்கள்

படைக்கும் தீஞ்சுவைக் காப்பியங்கள் பலவோடு

தயாராகிறது!


சட்டத்தின் கீழ்க் கைது செய்து நடவடிக்கை மேற் கொண்டது அந்த அரசு.

இரண்டு மூன்று திங்கள்களுக்கு முன்னதாக அரசின் தலைமைச் செயலக ஊழியர்கள் ஒட்டு மொத்தமாக ஒரு நாள் கேஷுவல் லீவு எடுத்தபோது, அப்படி லீவு எடுப்பது வேலை நிறுத்தம் என்று கருதப்பட்டு, அவர்களது சர்வீஸ் சலுகைகளை இழக்கவேண்டி இருக்கும் என்றும் அறிவித்தது அது.

தன் ஊழியர்களது வேலை நிறுத்தம் என்கிறபோது, தன் நிர்வாகம் நேரடியாகப் பாதிக்கப்படும் என்கிற கிலியின் காரணமாகத்தானே அத்தகு நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைந்தது அந்த அரசு?

இப்போது மத்திய அரசின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால், தனது நிர்வாகம் பாதிக்கப்படப் போவதில்லை என்ற காரணத்தால்தானே, அதற்கு ஊக்கம் தரும் வகையில் கேரள அரசு நடந்து கொள்கிறது?

மாமியார் உடைத்தால் மண்சட்டி—மருமகள் உடைத்தால் பொன்சட்டி என்ற போக்கில் செயல்படுவதுதான் கம்யூனிச சித்தாந்தம் என்றால், அது வேறுடன் கெல்லி எறியப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

மத்திய அரசு காங்கிரஸ் என்றிருந்தாலும், மாநில அரசு கம்யூனிச ஆட்சி என்றிருந்தாலும், கொள்கை ரீதியான போட்டிகள், போராட்டங்கள் கொள்கை ரீதியானதாகவும், ஜனநாயக நெறிக்கு ஒத்துப் போவதாகவும்தான் இருக்க வேண்டுமே ஒழிய அது காங்கிரஸ் அரசு என்பதனால் ஒரு தலைப்பட்ச தீர்ப்போ—நடவடிக்கைகளோ பொதுமக்களால் வரவேற்கப்பட முடியாததாகும்.

மக்களது ஆத்திரத்தையும் சிந்தனையையும் உசுப்பி விடுவதுதான் இப்போதைய கேரள அரசின் முடிவு.

அரசியல் சட்டம் 365—ஆவது பிரிவுப்படி நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய ஒரு நிலைக்குத் தனனைக் கேரள அரசு ஆளாக்கிக் கொண்டது விரும்பத்தக்கதல்ல!

ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் இத்தனை நிலைமைகளையும் தோற்றுவித்திருக்கிறது. அடையாள வேலை நிறுத்தம் என்பதனால், இது மீண்டும் நடைபெறக் கூடும் என்று பொருள்கொள்ள இடமுண்டு.

நல்ல வேளையாக இது பிசுபிசுத்துப் போய்விட்டிருக்கிறது. நீண்ட நெடும் நாளைய வேலை நிறுத்தம் என்று ஏற்பட்டால் அது எப்படி இருக்கும் என்பதற்கு இது ஒரு அறிகுறியாகவே தென்படுகிறது!

கம்யூனிஸ்டுகளானாலும், வேறு எந்த ஒரு அரசியல் கட்சியானாலும் சட்டத்தை மீறி ஒன்றைச் செய்ய முனையும்போது அதற்கு மக்களாதரவு நிரம்பத்தேவை! அந்த ஆதரவு யார்பக்கம் இருக்கிறது என்பதை பின்னர்தான் கவனிக்கவேண்டும்.

★

முத்து சிவகுருநாதன்.

எந்தவித மனித சஞ்சாரமுமற்ற நிலையில் இப்படி வந்து இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொள்வோம் என்று மாலதி கொஞ்சம் கூட நினைக்கவில்லை. தஞ்சையிலிருந்து கிளம்பியபோது எத்தனையோ இன்பக்கனவுகள் கண்டபடி மாலதி தன் கணவன் லெப்டினென்ட் குமாருடன் ஊட்டிக்கு வந்திருந்தாள்.

இராணுவத்தில் பணிபுரியும் குமாருக்கு சீசன் பார்த்து உதகமண்டலம் புறப்படுவது என்பது எளிதில் நடக்கக்கூடிய காரியமா என்ன? இரண்டுமாத ரஜாவில் பூனாவிலிருந்து தனது இளம் மனைவியுடன் தன்னுடைய சொந்த ஊரான தஞ்சை வந்திருந்த குமார் அவள் விரும்பியபடி பதினைந்து நாட்களை ஊட்டியில் கழிக்கலாம் என்றுதான் அவளுடன் புறப்பட்டு தனது நண்பர் ஒருவர் உதவியால் 'எஸ்டேட் பங்களா' ஒன்றில் தங்கியிருந்தான். செப்டம்பர் மாதத்தைக்கூட ஹாஃப்சீசன் என்று சொல்வார்கள்; மே சீசனைவிட இது கொஞ்சம் இதமாகக்கூட இருக்கும் என்றெல்லாம் விஷயமறிந்த நண்பர்கள் அவனுக்குக் கூறி அனுப்பியிருந்தார்கள். ஆனால் வானத்திற்கு என்ன வேதனையோ? அவர்கள் அங்கு வந்த நாள்முதல் மழை பிரளயமாகக் கொட்டிக்கொண்டிருந்தது. அவர்களால் வெளியே தலைகாட்ட முடியவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அன்று மாலதிக்கு உடம்புக்கு வந்துவிட்டது. அவளுடைய ஜுரத்தின் அனல்வேக அறிந்த குமார், யாராவது ஒரு டாக்டரைக் கையோடு கூட்டிவருகிறேன் என்று வெளியே கொட்டும் மழையில் மழைக்கோட்டை மாட்டியபடி புறப்பட்டுப் போனவன் இன்னும் வரவில்லை.

ஜன்னலை மூடியிருந்த திரையை விலக்கி வெளியே பார்த்தாள் மாலதி. எங்கும் ஒரே மலைத்தொடர் விண்ணை முட்ட வளர்ந்திருந்த 'யூகலிப்ட்ஸ்' மரங்கள் காற்றில் மெல்ல அசைந்தாடின. நெடிதுயர்ந்த மேகம் கொஞ்சும் அந்த மலைப்பிராந்தியத்தின் இயற்கை எழில்களைக் கண்குளிரப் பார்த்தவாறு தன் கணவனுடன் கால் கடுக்கச் சுற்றி வரவேண்டும் என்று அவள் கண்ட கனவுகளெல்லாம் வீண்தானா? அவளைப்பொறுத்தவரை அவள் நினைத்தபடி எதுதான் நடந்திருக்கிறது?

சென்னை 'குயின்மேரீஸ்' கல்லூரியில் அவள் படித்தபோது அவள்தான் அந்தக்கல்லூரியின் 'கிளியோபாட்ரா' எத்தனைப் பெண்ணணங்குகள் அவளைப் புடைசூழ வந்தாலும் அவர்களையெல்லாம் அப்பால் தள்ளிவிட்டு தனித்து ஒளிவீசும் பேரழகு அவளுடையது. ஆண்கள் என்றால் பெண்களை அடிமைகொள்ள நினைக்கும் அதிகாரப் பேய்கள் என்று சரியாகவோ தவறாகவோ தன் மனதில் ஒரு கணக்கைப் போட்டு வைத்துக் கொண்டிருந்த மாலதி தனது தோழிகள் காதலைப் பற்றியும் இன்னும் சிலர் தங்கள் காதலர்கள் பற்றியும் அவளிடம் கூறிய சமயங்களில் அவர்களைச் 'சுத்த ஏமாளிகள்!' என்றுதான் பரிகசித்து வந்தாள். ஆனால் அப்படிப்பட்ட அவளையே ஆட்டிப் படைக்கும் 'அண்டோனி'யாக மருத்துவக் கல்லூரி மாணவனான சேகர் வந்து சேர்ந்தபோது அவளுடைய வைராக்கிய எண்ணங்கள் தலைதெறிக்க ஓடின. அவனிடம் தன் இதயத்தைப் பறிகொடுத்தாள் அவள்.

அவனும் அவளுமாக 'மெரீனா' கடற்கரையில் உலகையே விலை பேசுவதுபோல் ஞாயிற்றுக் கிழமைகள்தோறும் மாலை வேளைகளில் மணிக் கணக்கில் பேசிக்கொண்டிருந்த காட்சிகளெல்லாம் அவளுடைய சிந்தையில் பளிச்சிட்டன.

அவள் விழி என்றால் அதை மூடும் இமை அவன். அவள் எழில் வீணை எனில் அதில் வெளிப்படும் இன்பநாதம் அவன். அவள் செஞ்சுடர் விளக்கு என்றால் அது சிந்தும் செவ்வொளிதான் சேகர். அவள் பேசும் கிளி என்றால் அது வீசும் மொழியாக அவன். இப்படித்தான் இருவரும் தங்களை ஒருவர்க்கொருவர் தந்து, உடலால் இருவர் என்றாலும் உள்ளத்தால் ஒருவரே என்று உலகிற்கு உணர்த்தும் உன்னத வாழ்க்கை நடத்த நினைத்திருந்தனர்.

ஆனால் காலம் விளைத்த கோலம் அவளுடைய பெற்றோரின் தீர்மானத்திற்கு எதிர் நிற்கமுடியாமல்—குறிப்பாக அவளது தந்தையின் சினத்தின்முன் அவளுடைய காதல் நினைவுகள் யாவும் காற்றிலடிபட்ட தூசுபோல் பறக்க, மாலதி ஒரு சுபயோக சுபதினத்தில் குமாருக்குக் கழுத்தை நீட்டினாள். தன்னைக் காதலித்தவனைப்பற்றி எல்லாம் தெரிந்து கொண்ட மாலதி, தன்னைப்பற்றி எதுவுமே அவனிடம் சொல்லி வைக்காமல்போனது எத்தனைப் புத்திசாலித்தனம் என்று நினைத்தபடி, திருமணம் முடிந்து குமாருடன் பூனாவிற்குப் புறப்பட்டதும் இனி தனது இல்லற வாழ்க்கையில் சேகரைப்பற்றிய நினைவை ஒழித்து நிம்மதியாக வாழலாம் என்றுதான் நினைத்தாள்.

நாடகத்திலே வரும் காட்சி மாற்றங்களைப் போலத் தன்னுடைய வாழ்க்கையிலும் மாறி மாறி வரும் நிகழ்ச்சி மாற்றங்களைப்பற்றி நினைத்தபோது மாலதியின் மனம் துன்பத்தால் துடித்தது, கடந்தகால நினைவலைகளை மறந்து தன் மீது கொள்ளை அன்பைக் கொட்டும் குமாருடன் மலைவாசஸ்தலத்தில் மகிழ்ச்சியுடன் சில நாட்கள் இருக்கலாம் என்று

வந்த தன்னை எங்கிருந்தோ வந்து பாழும் நோய் தொத்திக்கொண்டதே என அங்கலாய்த்துக் கொண்டாள் அவள்.

"மாலதி! இதோ டாக்டர் வந்து விட்டார்!" என்றபடி உள்ளே நுழைந்த கணவனையும் அவனுக்குப் பின்னுல் வந்த டாக்டரையும் கண்ட மாலதிக்குத் தூக்கிவாரிப்போட்டது. அதற்குக் காரணம் குமாருடன் வந்த டாக்டர் அவளுடைய அன்றைய காதலன் சேகர்தான்.

மாலதியின் மென்கரத்தைத் தொட்டு நாடியைப் பார்த்தான் சேகர். அவனுடைய ஸ்பரிசத்தால் அவளுடைய மேனி மேலும் கொதித்தது. ஸ்டெதாஸ் கோப்பைக் கொண்டு அவன் அவளைப் பரிசோதித்தபோது அவனது கண்களைச் சந்திக்க அஞ்சிய மாலதி தன் விழிகளை மூடிக்கொண்டாள்.

"மிஸ்டர் குமார்! நல்லவேளை, உடனே வந்து என்னை அழைத்தீர்கள். இது ஒருவித ஜுரம். உடனடியாகக் கவனிக்காவிட்டால் உயிருக்கேஆபத்துஏற்பட்டிருக்கும்நான் எழுதித்தரும் இந்த மருந்தைக் கொஞ்சம் வாங்கி வந்துவிடுங்கள்; என் கைவசம் உள்ள இன்செக்ஷன் மருந்தை உடனே செலுத்திவிடுகிறேன். பிறகு நீங்கள் வாங்கி வரும் மருந்தையும் செலுத்திவிட்டால் இரண்டு நாட்களில் எல்லாம் சரியாகிவிடும்!" என்றபடி ஒரு சீட்டில் ஏதோ கிறுக்கி குமாரிடம் நீட்டிஞன் சேகர். அதைப்பெற்றுக் கொண்டு வெளியே விரைந்தான் குமார்.

தன்னை நெருங்கிய சேகரின் கண்களில் கொப்பளித்தது குறும்பா? கள்ளத்தனத்தின் சாயலா? அல்லது பழிவாங்கும் வெறியுணர்வா? என்று எதுவுமே புரிந்து கொள்ள முடியாமல் தவித்த மாலதியின் கரங்களை எடுத்துத் தன் கைகளுக்கிடையில் வைத்துக்கொண்ட சேகரைப் பார்த்து மிக்க சிரமத்துடன் ஒரு புன்சிரிப்பைச் சிந்திவைத்தாள் அவள். தானும் அவனுமாக இருந்த அந்த தனித்த சூழ்நிலையில் என்ன விபரீதம் நடக்கப் போகிறதோ எனப்பயந்த மாலதிக்கு அழுகை, அழுகையாக வந்தது.

"மாலதி! ஏன் அசடுபோல் அழுகிருய்? எப்படியும் உன்னைப்பிழைக்க வைத்துவிடுகிறேன்!" என்ற சேகரின் கண்களில் இப்போது பளிச்சிட்டது விஷமம்தான். ஆமாம். சந்தேகமேயில்லை. மாலதிக்கு அவனுடைய சூழ்ச்சி புரிய ஆரம்பித்து விட்டது.

"சேகர்! என் கணவர் என்மீது கொள்ளை அன்பைப் பொழிந்து கொண்டிருக்கிருர். எங்கள் வாழ்க்கைப்பாதை எழில்மிக்கதாக அமைந்துவிட்டது. அந்தப் பாதையில் நீங்கள் குறுக்கிடக்கூடாது என்பதுதான் என் பணிவான வேண்டுகோள். நம் கடந்த கால காதல் நினைவுகளை நான் மறந்தொழிந்து நாட்கள் பலவாகிவிட்டன. நீங்கள் மீண்டும் அவற்றை நினைவூட்டாதீர்கள். அவரிடம் எதுவும் கூறிவிடாதீர்கள்!" என்று சேகரின் கரங்களைப் பிடித்துக் கொண்டு கெஞ்சிஞள் மாலதி.

'மாலதி! மணந்தால் உங்களையே மணப்பேன்; இல்லையேல் மரணத்தை வரவேற்பேன் என்று அன்று நீ என்னிடம் உறுதி கூறிய வார்த்தையைக் காற்றிலே பறக்க விட உன்னுல் எப்படி அத்தனை எளிதாக முடிந்தது? உனது வாழ்வு எழில்மிக்கதாக அமைந்துவிட்டதாக நீ பூரிக்கிருய். ஆனுல் எனது வாழ்க்கை? காலமெல்லாம் உனக்காகக் காத்திருக்கும் என்னை நீ மிகத்திறமையாக மோசம் செய்துவிட்டாய் என்பதறியாமல் என்ருவது ஒருநாள் உன்னைச் சந்திக்க முடியும் என்று நான் உறுதியோடு காத்திருந்தேன். என்னை அணைக்க வேண்டிய கரங்கள் இனியும் வேருெருவனை அணைப்பதை என்னுல் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. என்னையே நினைக்கவேண்டிய நெஞ்சம் வேறெவரையும் நினைக்க என்னுல் அனுமதிக்க முடியாது. ஆமாம். நான் தீர்மானமாக ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்!" என்று வெறிபிடித்த வேங்கைபோல் உறுமிஞன் சேகர்.

"சேகர்! நம் ஆதி நாளைய காதல் தொடர்பை என் கணவரிடம் சோல்வதன் மூலம் என் வாழ்க்கையைப் பாலைவனமாக்குவதால் உங்களுக்கு ஏற்படும் பயன் என்ன? என் பாதையைவிட்டு விலகிச் செல்லுங்கள். எனக்கு வாழ வழி விடுங்கள்!" என்று மீண்டும் சேகரின் கைகளைப் பற்றியபடி கெஞ்சிஞள் அவள்.

"மாலதி முதலில் என் கடமையைச் செய்து விடுகிறேன். பிறது நமக்குள் இருக்கும் வழக்கு பற்றிப் பேசலாம்" என்று கூறிய சேகர் மாலதியின் வலதுதோலில் ஊசி ஒன்றைச் செலுத்திஞன்.

பிறது "மாலதி! எங்கே உன் குவிந்த அதரங்களைக் கொண்டு வா இப்படி! உனக்குக் கிடைக்கும் கடைசி முத்தமாவது என்னுடையதாக அமையட்டும்!" என்றபடி மாலதியின் முகத்தை நோக்கிக் குனிந்த சேகரைப் பார்த்து, ஏ! மிருகமே! நான் மாற்ருன் மனைவியடா!" என்று வேதனையுடன் கத்திஞள் அவள்.

"அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் கனவில்கூடத்

# ஹெலன் கெல்லர்

ஹெலன் கெல்லர் கிட்டத்தட்ட பிறவியிலிருந்தே குருடு, செவிடு, பல வருஷங்கள் வரை ஊமை. ஆனால் இவள் காலேஜ் படிப்புப் படித்து முதன்மையாய்த் தேறிப் பட்டம் பெற்றிருக்கிறாள். பல புத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறாள்; உலகத்துத் திக்கற்ற மக்களின் உய்வுக்காக நடக்கும் எத்தனையோ பரோபகார இயக்கங்களுக்கெல்லாம் நிதி சேர்த்து உதவி இருக்கிறாள். பல தேச ராஜாக்கள், ராணிகள், பெரியோர்கள் எல்லோரும் இவளை விரும்பி அழைத்து, கைகுலுக்கி இவளுடன் சம்பாஷணை புரிந்திருக்கிறார்கள். இலக்கியம், தத்துவம், தாவரம் உயிர், பௌதீகம், பூமியியல் சமயம் இப்படிப் பல பொருள் பற்றிய நூல்களையும் இவள் ஆழ்ந்து பயின்றிருக்கிறாள். பல குதிரை சவாரி, நீச்சல் போன்ற பயிற்சிகள் செய்திருக்கின்றாள். சிற்பம், சங்கீதம், நாட்டியம் ஆகிய கலைகளை ரசித்து அனுபவித்திருக்கிறாள். ஒரு சமயம் ஓர் ஆகாய விமானத்தைக்கூட ஓட்டியிருக்கிறாள். செவிடும், குருடும், ஊமையுமான குழந்தைகளுக்கெல்லாம் கல்வி போதிக்கும் முறை இன்று உலகெங்கும் பரவியிருப்பதற்கு இவளுடைய வெற்றியும் முயற்சியும் பெரிதும் காரணமாகும்.

'நான் வாழும் உலகம்' (தி வொர்ல்ட் ஐ லிவ் இன்) என்ற ஒரு நூலை ஹெலன் எழுதினாள். 'இருளுக்கு வெளியே (அவுட் அவ் தி டார்க்) என்ற தலைப்புடன் ஒரு கட்டுரையையும் எழுதினாள். 'எல்லாம் நன்மைக்கே' (ஆப்டிமிஸம்) என்ற நூலில் "எப்போதும் மகிழ்ச்சியோடிருக்கும் மனோபாவம் உள்ளவர்கள், எதையும் நன்மையாக மாற்றிவிடுவார்கள்" என்று அதில் கூறியிருக்கிறாள். இக்கட்டுரையை எமெர்ஸன் என்ற தத்துவதர்சியைப் போல்தான் அவள் எழுதினாள்.

தன் வாழ்க்கையைக் குறித்து, "மனிதத் தன்மையே இல்லாத மௌன உலகில் வாழ்ந்த குருட்டுச் செவிடி ஒருத்தியின் போராட்டம்" என்று எழுதி இருக்கிறாள். மேலும், "களைத்துப் போன புலன்களுக்கு ஆறுதல் அளிக்கும் நிம்மதி அல்ல அந்த மௌனம். குருட்டுச் செவிடர்களின் மௌனம் அவர்களை உலகத்திலிருந்தே துண்டித்து அந்நியமாக்கி வைத்து விடுகிறது. களிப்பான ஒரு சொல்லோ, ஒரு குருவியின் கீதமோ, தென்றலின் ஒரு சிலுப்போ அதைக் கலைப்பதில்லை" என்று குறிப்பிடுகின்றாள். தன்னைப் போல் உடல் குறைஉள்ளவர்களுக்கு பிளேட்டோ என்ற தத்துவ சாஸ்திரியின் லட்சிய உலகம் விசேஷமான பொருள் உடையது என்று அவள் கண்டாள்! தத்துவ சாஸ்திரம் என்பது செவிடும் குருடுமான ஒரு மனிதனின் வரலாற்றை விரித்து வரைவது என்று எழுதினாள்.

அவளுடைய கை, 'காணும்கை.' அது அவளுக்குக் கண்ணாகவும் காதாகவும் உதவியது. அதன் மூலமே தன் நண்பர்களைக் கண்டு கொண்டாள். அது மட்டும் அல்ல; அவர்கள் சந்தோஷமாயிருக்கிறார்களா, வருத்தமாயிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொண்டாள்.

"மூன்று நாள் காணக் கிடைத்தால்" என்று ஒரு கட்டுரை எழுதினாள் ஹெலன். மற்றவர்களைப் போல தனக்கும் மூன்று நாள் கண் தெரிந்தால் அந்தக் காலத்தை எப்படி செலவழிப்பாள் என்று அவள் அதில் விவரித்திருக்கிறாள். முதல் நாள் தன் நண்பர்களின் முகங்களைப் பார்ப்பாள். சின்னஞ்சிறு குழந்தை ஒன்றின் முகத்தை உற்றுக் கவனிப்பாள் மாலையிலே ஏற்றும் விளக்கொளியின் இயல்பைக் கண்டறிவாள், இரண்டாவது நாள் உதயகாலத்தைக் காண்பாள். மகத்தான இத்தாலிய ஓவியங்களை நவீன ஓவியங்களுடன் ஒப்பிடுவாள். மூன்றும் நாள் எம்பயர் ஸ்டேட் பில்டிங்கின் உச்சியில் நின்றுகொண்டு நியூயார்க் நகரத்தை ஒரு கண்ணோட்டம் விடுவாள்.

பிரபல ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளினையும் சந்தித்துள்ளாள் ஹெலன். "அந்தரங்க சுத்தியுள்ள, சிந்தனை மிகுந்த, ஒரு வாலிபர், தம் கலை, வயலின் இரண்டிலும் ஆழ்ந்த சிரத்தை கொண்டவர்" என்று அவரைப்பற்றி எழுதி உள்ளாள். "இதோபார், இப்போது நான் நடிக்கும் படத்தை இப்படியே நிறுத்திவிடுகிறேன். 'உறங்கும் அழகி'யை எழுப்பும் படம் ஒன்றை இனிப்பிடிக்கிறேன். அதில் நீ நடிக்கலாம்" என்று சார்லி சாப்ளின் ஹெலனிடம் கூறினார். அவளை ஹாலிவுட்டில் ஒரு 'ஸ்டார்' ஆக்கிவிடப் போவதாக ஒரு காலத்தில் பேச்சுகூட இருந்தது.

ஹெலன் கெல்லரின் புத்தகம் தெவிட்டாதது. இலக்கிய உலகில் அவள் பெயர் பொன்னெழுத்துக்களால் எழுத வேண்டியது.

—எ. சேகரன்

---

தொடாதவன். எனவே நான் இப்போது கொடுத்த 'பாய்சன் இன்ஜெக்ஷன்' மூலம் மாணபுரி நோக்கிப் பயணம் செய்துகொண்டிருக்கும் நீ பெறும் இறுதி முத்தம் என்னுடையதாகவே இருக்கட்டும்!" என்று கூறியபடி அவளுடைய முகத்தை சிறிது மேலே தூக்கி அவளுடைய செவ்விதழ்களோடு தன்னுடைய குவிந்த உதடுகளை இணைக்க முயன்ற சேகரின் குரல்வளையைத் தாக்கி நெறித்தது லெப்டினெண்ட் குமாரின் குறிதவறாத கைத்துப்பாக்கிக் குண்டு.

அதைத் தொடர்ந்து "துரோகி!" என்று ஆவேசத்துடன் அறைக்குள் பாய்ந்த குமார், மாலதியின் கழுத்தை நெறிக்கத் தன் கரங்களைக் கொண்டு போனான்" அவள் ஏற்கெனவே இறந்துவிட்டாள் குமார்! என் காதலி வேறொருவருடன் வாழ்வதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவள் வாழ்க்கையை நான் முடித்தேன்! என் வாழ்வை நீங்கள் முடித்துவிட்டீர்கள்! எங்கள் இருவரது கணக்கும் தீர்ந்துவிட்டது!" என்று சிரமத்துடன் வார்த்தைகளைச் சிந்திய சேகர் குமாரின் காலடியில் சுருண்டு விழுந்தான்.

எத்தனையோ சவங்களைக் கண்டு மனம் கலங்காத அந்த லெப்டினெண்டின்மனம் நிலைகுலைந்து கலங்கியது. கண்கள் மழைபொழிய அந்த இரண்டு சவங்களையும் பார்த்து சிலையாக மாறி நின்றான்!

★

# நட்பெனப்படுவது

பழனியூரான்

இடுக்கண் வருங்கால் உடுக்கை இழந்தவன் கைபோல, உதவ வேண்டிய நண்பனுகிய நான் கொஞ்சமும் ஈவிரக்கமின்றி அவனை விரட்டிக்கொண்டிருந்தேன்.

"குமார்"

மோகன் தலையை நிமிர்த்திப் பேசினன்.

"சீ பேசாதே போவெளியே!!

நான் மீண்டும் விரட்டினேன்.

அந்த நேரத்தில்தானு, அவன் மனைவி கோமதி வந்து சேரவேண்டும்? என் இரைச்சலைக் கேட்டு அதிர்ந்தே போய்விட்டாள் என்றுதான் கூறவேண்டும். எந்தப் பெண்தான் தன் கண்களுக்கு முன்னுலேயே தன் கணவன் பிறரால் விரட்டப்படுவதை; பொறுத்துக் கொள்வாள்? நண்பர்களுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

"என்னங்க..... உங்களுக்கு பைத்தியமா பிடித்துவிட்டது?" கோமதியின் முகம் கோவைப் பழம்போல் சிவந்திருந்தன.

"ஆமாம்! எனக்குப் பைத்தியம்தான பிடித்துவிட்டது.........இப்பொழுதே உன் கணவன் என் வீட்டைவிட்டு வெளியேறிவிட வேண்டும்"

நான் அவளிடமும் விரட்டுகிறேன்.

"காரணம்?"

"நான் இப்பொழுது சொல்லத் தயாராய் இல்லை!!

"நான் சொல்லுகிறேன். நீங்கள் ஒப்புக்கு அழைத்ததற்காக நாங்கள் இங்கே வந்து, ஒரு வாரத்திற்கும் மேலாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதை உங்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை!

"கோமதி"

நான் உரக்கக் கத்தினேன். எவ்வளவு பெரிய பழியை என்மீது சுமத்திவிட்டாள்?

"ஆமாம் அதனுல்தான் எனக்குத் தெரியாமல் அவரை வெளியே போகச் சொல்லுகிறீர்கள். இதோ நானும் வெளியேறிவிடுகிறேன். நண்பர்கள் வீடென்ன, பெற்ற தகப்பன் வீட்டிலேயே இரண்டு நாட்களுக்குமேல் தங்கக் கூடாது என்று நான் சொன்னதையெல்லாம் உதாசீனப் படுத்திவிட்டு இத்தனை நாட்கள் இங்கே தங்கினீர்களல்லவா. உங்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். வாருங்கள் போவோம்!!"

கோமதி தன் பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு, மோகனையும் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு, வீட்டைவிட்டுப் போய் விட்டாள். போயே விட்டாள். என்னையறியாமலேயே என் கண்களில் இருந்து கண்ணீர் குபுகுபு வெனப் பெருக்கெடுத்தோடுகிறது.

மொட்டை மாடிக்கு வருகிறேன். வண்டிகளும், லாரிகளும், கார்களும் மனிதர்களும் எறும்புகளைப்போல் சுறுசுறுப்பாக வருவதும் போவதுமாக இருப்பது நன்கு தெரிகின்றன. வானளாவ உயர்ந்திருந்த மாடிகளும், குடிசைச் சுவர் போலிருந்த மண்மேடுகளும்கூடப் பளிச்செனத் தெரிகின்றன. நான் கண்களை நான்கு பக்கங்களிலும் சுழலவிடுகிறேன்.

அதோ... அதோ......ஒரு குதிரை வண்டியில் கோமதியும், மோகனும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்க் கொண்டிருக்கிருர்கள்.........குதிரை வண்டிகூட மெதுவாகச் செல்லுகிறதே...ஏன்? ஒருவேளை நான் நன்ருக–இறுதியாகப் பார்த்துக் கொள்ளட்டும் என்ருே?

மோகன் இன்று நேற்றில் இருந்துதான் எனக்கு நண்பன் அல்ல. சின்னஞ் சிறு வயதில் இருந்தே... மணலில் வீடு கட்டி, மளிகைக் கடைவைத்து விளையாடிய பிஞ்சுப் பருவத்தில் இருந்தே — அவனும் நானும் நண்பர்களாகத்தான் இருந்தோம்.

நான் கடைவீதி செல்லவேண்டுமானுல் அவன் வீட்டைக் கடந்து தான் செல்லவேண்டும். அவன் ஆற்றிற்குச் செல்லுவதென்ருல் என்



22.9.68

வீட்டைக் கடந்துதான் ஆகவேண்டும்...இவ்வளவு நெருக்கமாக, ஒரே ஊரில் இருந்துகொண்டு நட்பை வளர்க்காமல் எப்படி இருக்க முடியும்?

அவனும் படித்தான்; நானும் படித்தேன். அவனுக்கு நெய்வேலியில் உத்தியோகம் கிடைத்தது. எனக்கு இங்கே கிடைத்தது. அவனுக்குக்கோமதி வாழ்க்கைத்துணைவியானாள். எனக்கு மீனு வாழ்க்கைத் துணைவியாக வந்தாள்.

என்றாலும் எங்கள் நட்பு நேற்று வரை குன்றாமல் — குறையாமல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு தான் வந்தது. அதனால்தான் சென்ற வாரம் இங்கே சாட்டிய மாரியம்மன் பண்டிகையையொட்டி அவனையும் கோமதியையும் விருந்தினர்களாக அழைத்திருந்தேன்.

ஆனால், விழாவிற்கு வந்த அவன் தான் ஒரு அரசாங்க உத்தியோகஸ்தன் என்பதையும் மறந்து, இவ்வூரிலேயே கேடியென்றும், ரவுடியென்றும் பெயர்பெற்ற ரங்கனோடு சேர்ந்துகொண்டு குடிப்பதும், சீட்டு விளையாடுவதுமாக இருந்தானே? சே...சே...அவையெல்லாம் அவன் செய்யக் கூடியனவா?

நண்பன் என்ற முறையில் எத்தனைத் தடவை கோமதிக்குத் தெரியாமல் அவனைக் கண்டிப்பது? புத்தி மதி கூறுவது?

இந்த உண்மையை உணராது கோமதி எவ்வளவு பெரிய பழியை என்மீது சுமத்திவிட்டுப் போய் விட்டாள்?

நேற்று இரவு நான் அவனுக்கு சொல்லிய 'வேண்டற்க: வென்றிடினும் சூதினை' என்ற திருவள்ளுவரின் அறிவுரையெல்லாம் பயனற்றுப் போன பின்தான், நட்பெனப்படுவது, நகுதற் பொருட்டன்று. இடித்தற் பொருட்டு என்பதற்கொப்பவே அவனை விரட்ட நேரிட்டது என்பதைக் கோமதி அறிந்துகொள்ளவே மாட்டாளா?

எனக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த ஓரிரு பத்திரிகைகள் காற்றிற்கு அங்குமிங்கும் அசைந்த வண்ணமிருக்கின்றன. என் மனைவி மீனு காப்பிக் கோப்பையை ஏந்தி என் முன்னால் வந்துகொண்டே 'அதோ பாருங்க...ரங்கனைப் போலீஸார் பிடிச்சுக்கிட்டு போகிறார்கள்'' என்கிறாள். நான் அவள் காட்டிய திசையை நோக்குகிறேன். சந்தேகமேயில்லை; ரங்கன் கைகளில் விலங்கு மாட்டப்பட்டு இரண்டு போலீஸ்காரர்களின் காவலோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்து கொண்டிருக்கிறான். அதோ அவனுக்குப் பின்னால் வருவது யார்? மோகனா? மோகனா?

''ஐயோ......கோமதி உன் கணவனைப் போலீசார் பிடித்துப் போகிறார்களம்மா.''

நான் வேகமாக ரயில்வே ஸ்டேஷனுக்கு ஓட்டமும் நடையுமாகச் செல்லுகிறேன். முதல் வகுப்பு பிரயாணிகள் தங்கும் அறையின் உள்ளிருந்து ''நிஜமாகவா?'' என்ற கோமதியின் குரல் கேட்கிறது...... நான் அங்கேயே நின்று கேட்கிறேன்.

''ஆமாம் கோமதி...நீகூட குமார் என்னை வெளியே போகச்சொன்ன போது கோபப்பட்டே.......அப்படி அவன் பேசாமல் இருந்திருந்தால் இப்பொழுதும் அந்த ரங்கனோடதான் சீட்டுவிளையாடிக்கொண்டு இருந்திருப்பேன்......இப்போ போலீசார் அவனைப் பிடிச்சமாதிரி என்னையும் பிடிச்சிருப்பாங்க!!

மோகன்தான் பேசுகிறான்.

''அப்போ அவரு உங்களை இதுக்காகத்தான் வெளியே போகச் சொன்னாரா?'' கோமதி சந்தேகத்தோடு கேட்கிறாள்.

''ஆமாம் கோமதி'' அவன் தெளிவுடன் சொல்லுகிறான்.

''ஐயோ என் கணவன் திருந்தனும்னு அவரை வெளியே போகச் சொன்னீங்க......அநியாயமா உங்க மனதைப் புண்படுத்திட்டேனே! என்னை மன்னிச்சுடுங்க......மன்னிச்சுடுங்க! கோமதி, என்மீது, தான் கூறிய பழியையெண்ணி வருந்துகிறாள்.

முன்போலவே, என் கண்களில் இருந்து கண்ணீர்ப் பெருக்கெடுத்தோடுகிறது. ஒருவேளை அது 'நட்பெனப்படுவது' என்ற உண்மையை கோமதி உணர்ந்துவிட்டாள் என்ற மனநிறைவால் வழிந்த ஆனந்தக் கண்ணீராக இருக்குமோ?

★

# தலைமகன் வாழ்கவே!

கூர்த்த விழிகள்!
பார்க்கப் பார்க்கப்
இனிய பாவனை!
கனிந்து குலுங்கும்
சரளப் பேச்சு!
கரகரப் பற்ற
முத்துச் சொற்கள்!
தத்துவ நாதம்
ஆவலின் உருவம்!
காவிக் கறைகள்!
கூலிக் குழைக்கும்
தோளைத் தழுவும்
பஞ்சையர் நெஞ்சைச்
வஞ்சகர் நோக்கை
குற்றம் மறக்கக்
ஒற்றுமை காக்க
விம்மும் திண்தோள்
செம்மையில் நடக்கச்
ஏழையர் நெஞ்சில்
நாளைய உலகைத்
குற்றங் குறைகள்
பெற்றதாய் நாட்டைப்
எல்லோர் வாழ்விலும்
அள்ளித் தெளிக்கும்

குமிழ்ப்பூஞ் சிரிப்பு!
பரவசம் கொள்ளும்
எளிமை ஆடைகள்!
கருத்துப் பூக்கள்!
சரித்திர மூச்சு!
காவிய ஓட்டம்!
மோகன வர்ணனை!
சங்கம மாகும்!
அழகு வெற்றிலைக்
கவிப்பா சறைகள்!
கோடிப் பரம்பரை
பொதிகைத் தென்றல்!
பாசம் வருடும்!
வார்த்தைகள் பிளக்கும்!
குவியும் கரங்கள்!
ஓடும் கால்கள்!
வீரச் சைன்யம்
செய்யும் தளபதி!
ஏற்றிய விளக்கு!
தாங்கும் மணித்தூண்!
உணர்ந்து கனிந்து
பேணும் தலைமகன்!
ஏற்றம்
அண்ணா வாழ்கவே!

—குமணன்—

# பாரதி கவித்துவம் ஒரு மதிப்பீடு

ஆசிரியர்: இராஜேஸ்வரி நீலமணி
விலை: ஒரு ரூபாய்.
வெளியீடு: இதழ்ப் பதிப்பகம் சென்னை-5

'பாரதி கவிதை எழுத முயன்ற ஒரு பயிலுநர் மட்டுமே. அவர் கவிஞர் அல்லர்' என்ற முடிவைப் 'பாரதி கவித்துவம் — ஒரு மதிப்பீடு' என்னும் இந்நூல் வெளியிடுகிறது. இந்த முடிவை வலியுறுத்துவதற்கு— நிலைநிறுத்துவதற்கு நீண்டதொரு பிழைப்பட்டியலையும் வளர்த்திக் காட்டுகிறது இந்நூல். பிழைப்பட்டியல்களின் தொகுப்பே இந்நூல்.

பாரதியின் பாடல்களில் இருப்பதாகக் கூறப்படும் பிழைகள் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம். பிழைகளின் கொள்கலம் பாரதியின் பாடல்கள் என்கிறார் இந்நூலாசிரியர் இராஜேஸ்வரி நீலமணி. ஆசிரியர் சுட்டிக் காட்டும் பிழைகளில் தள்ளத் தக்கன பல; கொள்ளத் தக்கன சில.

பாரதி கவித்துவம் பற்றிய இந்த மதிப்பீட்டை ஆழ்ந்து நோக்கினால் பாரதியைத் 'தவிடுபொடி' ஆக்கி விடுவதென்ற ஒரே குறிக்கோளுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதென்பது புலனாகிறது. இவ்வெண்ணம் தோன்றாது இருக்க நெஞ்சை வேறு வேறு திக்கில் திருப்பிவிட்டாலும் அங்கெல்லாங்கூட இதே எண்ணம் வந்து குறுக்கிடுகிறது. காரணம் நடுநிலை நோக்குடன் பாரதியின் கவிதைகள் ஆராயப்படவில்லை என்பதேயாகும்.

இராஜேஸ்வரி நீலமணி அவர்கள் நடுநிலை தவறிவிட்டார்கள் என்பதற்கான முழுப் பொறுப்பையும் அவர் மீதே சுமத்த நாம் விரும்பவில்லை— ஏனெனில் பாரதி பற்றி இன்றுவரை நிலவிவரும் மதிப்பீடும் நடுநிலை நோக்குடன் ஆராய்ந்து வெளியிடப்பட்டதல்ல என்பதையும் நாம் அறிவோம். பாரதி மகாகவி என்றும் வரகவி என்றும் அவருக்குப் பிறகு தமிழ்க் கவிஞர்களே பிறக்கவில்லை என்றும் பிறக்க முடியாது என்றும் தமிழ் இலக்கிய உலகில் விளம்பரம் பெற்றுள்ள 'கிளிப்பிள்ளைகள்' கூறினார்கள்; கூறி வருகிறார்கள். தமிழ் இலக்கிய உலகில் இப்படிப்பட்ட 'கண்மூடி' மதிப்பீடுகள் காலூன்றித் தலைதூக்கி நிற்பதைக் கண்டால் எவருக்கும் ஆத்திரம் வரும். எனவே இராஜேஸ்வரி நீலமணி இதற்கு விலக்கல்ல, 'கண்மூடி' மதிப்பீடுகள், 'போற்றி, போற்றி' மதிப்பீடுகள் என்னும் நச்சு மரங்களை வேரோடு சாய்க்க வேண்டுமென்று துணிந்த இராஜேஸ்வரிநீலமணியின் உள்ளத்தில் ஆத்திரப் புயல் ஓங்கி அடித்திருக்கிறது. அதன் அடையாளமே 'பாரதி கவித்துவம்—ஒரு மதிப்பீடு.

பாரதி ஒரு மகாகவி — வரகவி என்ற கருத்து எவ்வளவு பிழைபாடு உடையதோ அவ்வளவு பிழைபாடு உடையது பாரதி கவிஞரே அல்லர் என்பதும். பாரதி ஒரு கவிஞர் என்ற கருத்தை நிறுவியிருந்தால் இந்நூலாசிரியன் குறிக்கோள் வெற்றி பெற்றிருக்கும்; பெரும்பான்மையோரின் பாராட்டுதலையும் ஆதரவையும் பெற வாய்ப்பு உருவாகியிருக்கும்.

பாரதியின் கவிதை மலரில் இலக்கிய 'மேலோர்' கண்டு போற்றும் எளிமை கற்பனை வளம், உணர்ச்சி வெள்ளம், சொல்லழகு, நடைச் சிறப்பு முதலியன இன்றைய இளைஞர்கள் பலருடைய கவிதைகளிலும் சிறந்து விளங்கக் காண்கிறோம். பாரதியை வெல்லும் பாநலம் கனியப் பெற்ற பாவல்லோர் பலர் தமிழகத்தில் இன்று உருவாகி வருகிறார்கள் என்பதை இலக்கியத் தூண்களாக நின்றுகொண்டிருப்பவர்கள் உணர மறுக்கிறார்கள் அல்லது உணர முன்வரவில்லை. இந்த அவலநிலை நீடிக்கும்வரை 'பாரதி கவித்துவம்—ஒரு மதிப்பீடு' போன்ற நூல்கள் உருவாக்கும் இக்கட்டான நிலைமையைத் தவிர்க்க முடியாது.

இராஜேஸ்வரி நீலமணி அவர்கள் தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ள குற்றங் குறைகள் அனைத்திற்கும் சமாதானம் சொல்வது நம் வேலை அல்ல; எனினும் எடுத்துக்காட்டாகச் சிலவற்றை ஆராய்ந்து பார்ப்பது நன்மைபயக்கும் என கருதுகிறோம்.

பாரதியின் கவிதைகளில் மொழித் தூய்மை இல்லை; பண்டிதச் சொற்களும் சந்தைச் சொற்களும் விகாரச் சொற்களும் மலிந்துள்ளன; இலக்கணப் பிழைகள் உள்ளன; வழக்கொழிந்த அளபெடைகள் இடம் பெற்றுள்ளன — என்பவை நூலின் முதல் பகுதியில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள்.

பாரதியின் பாடல்களில் இடம் பெற்றுள்ள சொற்கள் பற்றி ஆராயும் போது, அவருடைய பிறப்பிடம், வளர்ப்பிடம், அவர் மொழியைக் கற்ற சூழல், வாழ்ந்த காலநிலை ஆகியவற்றை மனத்துட் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் நின்று ஆராய்ந்தால், சொல்தொடர்பாகப் பாரதி இழைத்துள்ளதாகக் கருதப்படும் பிழைகளைப் பெரிதுபடுத்துவதில் நியாயம் இருப்பதாகத் தோன்றவில்லை.

ஓர் தாயின், ஓர் பெண்ணை என்று எழுதுவது பிழைதான். எனினும் கவிதை உலகில் இது சாதாரணமாக உள்ளது; அனுமதிக்கப்பட்டு வந்துள்ளது. கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானே கும்பகருணன் வதைப் படலத்தில் கும்பகருணன் இராவணனை வணங்கும் காட்சியை வருணிக்கும்போது 'ஓர் மலை கிடந்தது போல்' என்று பாடுகிறார்.

கவிதைகளில் அளபெடைகள் கூடா என்று தடைபோடும் உரிமை நமக்கு இல்லை. மேலும் 'எட்டுத்தொகைப் பாடல்களிலிருந்து இன்றைய கவிதைகள் வரையிலான கவித்துவப் பிழிவையே எடைக்கல்லாகக் கொள்கிறோம் என்று கூறிவிட்டு அளபெடை தொடர்பாகக் குற்றங் காண்பது அழகன்று.

கவிஞனை ஒரு வேலிக்குள் அடைக்க இந்நூலாசிரியர் முயல்கிறார் என்பதை அவர் எழுப்பியுள்ள பல வினாக்களே மெய்ப்பிக்கின்றன. கவிதைப் பண்புக்குமுரணான வினாக்கள் சில; குதர்க்கமான வினாக்கள் சில. வேலியையே வெட்டவெளியாகவும் வெட்ட வெளியையே வேலியாகவும் மாற்றிடும் ஆற்றல் படைத்தவன் கவிஞன் என்பதை மறப்பதால் விளையும் தொல்லை இது.

கோளம் தேவனாகுமோ? இது ஒரு கேள்வி. கவிஞன் நினைத்தால் கோளத்தைத் தேவனாக்குவான்; தேவனைக் கோளமாக்குவான்; கோளத்தைக் குளமாக்குவான்; குளத்தைக் குட்டையாக்குவான்; குட்டையைக் கடலாக்குவான்; கடலையே கோளமாகவும் மாற்றுவான்; தேவனாகவும் காட்டுவான்.

மேலைவானை நோக்கினால் கீழ்த்திசை தெரியுமா? இது மற்றொரு கேள்வி. ஆம் தெரியும், நமக்கல்ல; கவிஞனுக்கு.

மலைகள் எந்தக் காலமும் ஓரிடம் விட்டு நகர்வதில்லை என்று பாடிவிட்டுப் பிறகு ஒரு மொழி உரையாது விளையாடவரும் என்று எவ்வாறு பாடலாம் என்பது இன்னொரு கேள்வி; இப்பாட்டில் முதல் அடி

(12-ம் பக்கம் பார்க்க)

உள்ளாட்சித்துறை அமைச்சர்

# பிறந்த நாள் பரிசு

மா. முத்துசாமி

தமிழகத்தின் வரலாற்றிலேயே மூவேந்தர் காலத்திற்குப் பிறகு தமிழாய்ந்த தலைமகன் தமிழகத்தின் முதலமைச்சராய் வரப்பெற்ற காலம் அறிஞர் அண்ணா அமைச்சரவையாகும். ஆகவே நாம், அவர்கள் காட்டிய வழி நின்று நாட்டுக்கு நம்மாலியன்றவற்றை ஒற்றுமையோடு செய்வதே அவருக்கு நாம் அளிக்கும் பிறந்தநாள் பரிசாகும்.

அண்ணா!—இந்தச் சொல், திராவிட முன்னேற்றக் கழகத்தோழர்களைப் பொறுத்தவரையில், உயிரிலும் உடலிலும் வாழ்விலும் இரண்டறக் கலந்துவிட்ட ஒரு சொல்லாகும்! இந்நாட்டு மக்கள் அனைவரின் வாழ்விலும் பின்னிப் பிணைந்துவிட்ட ஒரு பூங்கொடியாகும்! நல்லவர்கள் இதயங்களில் நீங்காது கொலுவீற்றிருக்கும், உயிரோவியமாகும்!

'அண்ணா' என்றால் 'ஏழைகளின் துயர் துடைக்கும் ஏந்தல்' என்று பொருள்!

'அண்ணா' என்றால், 'அழகு தமிழ் மொழிக் காவலன்' என்று பொருள்!

'அண்ணா' என்றால், அன்பு—அறிவு—அடக்கம்—ஆற்றல்—கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு ஆகியவற்றின் மொத்த உருவம்' என்று பொருள்!

நான்கு கோடி மக்களின் நலனுக்காக அண்ணா அவர்கள் தம் வகையில், இரவு—பகல் ஒன்றெனக் கருதி—கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகப் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு—இன்னல்கள் பல ஏற்று—எதிர்ப்புகளைச் சமாளித்து—பாமர மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றமைக்காக நாட்டு மக்கள் தங்கள் நன்றிக் கடனாக 'முதலமைச்சர்' என்ற சொல்லுக்கு முன்பாகச் சேர்த்திருக்கிறார்கள்!

அத்தகையோரின் நம்பிக்கை வீண்போகாதவாறு, பொறுப்பு ஏற்ற நாள் முதல் இதுவரையில்—ஊண் உறக்கமின்றி—ஏழ்மை எனும் இருள் அகலவும், ஒளிமயமான தமிழகத்தை உருவாக்கவும் தம்மாலானவற்றை முறையோடு இந்த ஒன்றரையாண்டுக் காலத்தில் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நாடு அறியும்—நல்லவர்கள் அறிவார்கள்!

தமிழக அரசின் இந்த ஒன்றரை ஆண்டுக்காலச் சாதனைகளை நம் மாநிலத்திலுள்ள காங்கிரசாரைத் தவிர, பிற மாநிலங்களிலுள்ள காங்கிரசுத் தலைவர்களும், மத்திய அரசின் அமைச்சர்களும் பாராட்டுவதிலிருந்து நன்கு புலனாகும்!

இத்தகைய புகழினுக்கு நிலைக்களனாக விளங்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு 59 வயது நிறைந்து 60-வது வயது துவங்கும் இந்நன்னாள், நமக்கெல்லாம் ஓர் பொன்னாள்!

இந்நாளில், அண்ணா அவர்களின் அரும்பெரும் சிறப்பியல்புகளை நாட்டுமக்கள் நன்கு அறியும் வண்ணம் விழா எடுக்கவும், மலர் தொடுக்கவும், மாற்றார் மருளும் வண்ணம் நமது தோழர்கள் காட்டும் ஆர்வம் கண்டு பெருமிதமும், நமக்கு ஓர் புதிய சக்தியும் எழுச்சியும் ஏற்படுவதாக உணருகின்றோம்!

அறிஞர் அண்ணாவின் அறிவாற்றலை—சிந்தனைத் திறன் தெளிந்த அரசியல் ஞானம் ஆகியவற்றை எடுத்துக் காட்டும் திறமை எனக்கு இல்லை; இருந்தாலும், அவரின் தொண்டர்க்குத் தொண்டனாகவும், அவருடன் பழகி அவர் இடுகின்ற கட்டளையை ஏற்று நடத்தும் ஏவலாளனாகவும் வாய்ப்புப் பெற்ற நான், ஆர்வத்தின் காரணமாக ஒரு சிலவற்றைக் கூறுவதில் தவறொன்றும் இல்லை என்று கருதுகிறேன்.

அண்ணா அவர்கள் பொறுப்பு ஏற்ற மார்ச் 6-ம் நாளன்று, அதிகாரிகள் — அலுவலாளர்கள்— அந்தஸ்து பெற்றோர் முதலியோர் புடைசூழப் பதவிப் பிரமாணம் முடிந்து இராஜாஜி மண்டபத்தினின்று வெளியே வருகிறார்கள்; மக்கள் வெள்ளம், தங்கள் இருளகற்ற வந்திருக்கும் உதயசூரியனை—தமிழ்த் தாயின் தலைமகனை — தங்கள் குடும்பத்து முதல்வனை — முதலமைச்சராய்க் காண ஆவலோடு கூடியிருக்கிறார்கள். தம்மோடு வந்திருக்கும் அதிகாரிகளைப் பார்த்து, 'ஒரு நிமிடம்' என்று சொல்லிவிட்டு, மக்கள் வெள்ளத்தின் பக்கம் நின்று கையை ஆட்டிப் புன்முறுவல் பூக்க — அவர்களின் 'வாழ்க' என்ற முழக்கம் விண்ணைப் பிளக்க—அங்கிருந்தோர் கண்களில் பனித்து நின்ற ஆனந்தக் கண்ணீரும் இந்நாட்டு வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடிய காட்சிகளாகும்! இக்காட்சி, என் நெஞ்சை விட்டகலாத காட்சியாகும்!

சட்டமன்றத்தில் அவர் ஆற்றும் உரைகள்—மாற்றார்கள் மன எரிச்சல் காரணமாக வீசும் இகழுரைகளுக்கு அவரின் இதமான பதில்கள்—கொள்கைகளை எடுத்து ஆணித்தரமாக விவாதிக்கும் பாங்கு—மாற்றுக் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கும் குத்தலான கேள்விகளுக்கு அளிக்கும் வேடிக்கையான பதில்கள்—எதிர்க் கட்சித் தலைவர் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு, அவர்கள் குற்றச்சாட்டுகளிலிருந்தே ஆதாரங்

கள் எடுத்துக் காட்டி, அவற்றைத் 'தவறு' என நிரூபிக்கும் தனித் திறமை—இவைகளைக் கண்ணுறும் பத்திரிகையாளர்கள், நடுநிலைமையாளர்கள் ஆகியோர், 'அண்ணா அவர்கள் 10 அல்லது 15 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்து சட்டமன்றங்களை நடத்திச் சென்ற அனுபவமிக்கவர்போல் இருக்கிறது' என்று பலமுறை கூறக் கேட்டிருக்கிறேன்.

அண்மையில் மேலைநாடுகள் பலவற்றிற்குச் சென்று திரும்பிய நான்—அங்கெல்லாம் அண்ணா அவர்களைப் பற்றியும், அவர் ஆட்சியைப் பற்றியும் உலகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள தலைவர்கள் தெரிந்துகொள்ள ஆவலாக இருப்பதனைக் கண்டு என் உள்ளமெல்லாம் பூரித்ததனை இங்கு விவரிக்க இயலாது.

உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப் படத்தைத் திரையிட்டுக் காட்டிய இடங்களிலெல்லாம், இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டினைத் திறம்பட நடத்திக் காட்டிய அண்ணா அவர்கட்குச் சூட்டிய புகழாரங்கள், என் நெஞ்சில் என்றும் பசுமையாக நிலைக்கத்தக்க அளவிற்கு உள்ளன.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இலண்டன் தமிழ்ச் சங்கம் என்னை மிகவும் வற்புறுத்திக் கேட்டதெல்லாம், அண்ணா அவர்களை ஒருமுறை இலண்டனுக்கு அனுப்பி வைத்துத் தாங்கள் பார்க்கும் வாய்ப்பையும் அவர் சொல்லமுதைப் பருகும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க நிரம்ப வேண்டிக் கொண்டதேயாகும்.

இவற்றை நேரில் காணும் வாய்ப்புப் பெற்ற நான், அண்ணா அவர்கள் அமைச்சரவையில் இருக்க வாய்ப்புக் கிடைத்தமையும், அதைவிட எனக்குச் சென்ற இடங்களில் கொடுக்கப்பட்ட வரவேற்பு, அவர் காட்டும் ஒளியில் நான் மற்றவர்க்குத் தெரியும் வகையாகக் கொண்டு என் வாழ்நாளில் மறக்கமுடியாத பெரும் பேறாகக் கருதுகிறேன்.

எந்த ஆண்டும் இல்லாத வகையில் இவ்வாண்டு அண்ணா பிறந்தநாள் ஒரு தனிச் சிறப்புடைய நாளாகும். காரணம்—கலைஞர்கள் சொன்னதுபோல் உலகத் தமிழ் மாநாட்டினையொட்டிக் கடற்கரையில், தமிழ் வளர்த்த பெரியோர்களின் நினைவாகப் பத்து சிலைகளை அமைத்ததனால், தமிழ்மீது அவருக்கிருக்கும் பற்றுதலை வெளிப்படுத்த அண்ணனுக்கும் ஓர் சிலை நாம் அமைத்துவைத்து அகமகிழும் ஆண்டாகும் இது!

அந்தமான் தமிழ்ச் சங்கம், வங்கத் தமிழ்ச் சங்கம் இவற்றிற்கும் மேலாக இலண்டன் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகள் இவ்வாண்டு அறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்தநாளை தனிச் சீரோடும் சிறப்போடும் கொண்டாட இருப்பது அறிந்து நமக்கெல்லாம் பெருமையும் பூரிப்பும் ஏற்படுகிறது. இவ்வாண்டில் இலண்டன் தமிழ்ச் சங்கத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறக்கப்பட விருப்பது, தமிழர்கள் அனைவரும் பெருமைப்படத்தக்க நிகழ்ச்சியாக விளங்கும். 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகையில்' இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது.

தமிழகத்தின் வரலாற்றிலேயே மூவேந்தர் காலத்திற்குப் பிறகு தமிழாய்ந்த தலைமகன் தமிழகத்தின் முதலமைச்சராய் வரப்பெற்ற காலம் அறிஞர் அண்ணா அமைச்சரவையாகும். ஆகவே நாம், அவர்கள் காட்டிய வழி நின்று — அவர்கள் வகுக்கும் வழி நடந்து — தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், நாட்டினுக்கும், நம்மாலியன்றவற்றை ஒற்றுமையோடு செய்வதே அவருக்கு நாம் அளிக்கும் பிறந்த நாள் பரிசாகும்.

—நன்றி: 'நம்நாடு'

---

10-ம் பக்கத் தொடர்ச்சி

யில் கவிஞன் உண்மையை வெளியிடுகிறான்; இரண்டாவது அடியில் தன் ஆசையைத் தெரிவிக்கிறான். அவ்வளவுதான். இதில் முரண்பாட்டிற்கே இடமில்லை.

கூறியது கூறல் குற்றந்தான் என்றாலும் பாடல் படிப்பவருக்குச் சலிப்புத் தட்டாத நிலையில் — சுவைப்பதற்குத் தடையாக இல்லாத நிலையில், கூறியது கூறல் என்பது ஒரு குற்றமாகவே படுவதில்லை. திருக்குறளில் நடுநிலைமை அதிகாரத்தில் ஐந்தாவது குறளில் 'கோடாமை சான்றோர்க்கு அணி' என்று பாடிவிட்டுப் பிறகு எட்டாவது குறளிலும் 'கோடாமை சான்றோர்க்கு அணி' என்றே பாடுகிறார் பொய்யாமொழிப்புலவர். இக்கூறியது கூறலுக்கு என்ன சமாதானம் கூற முடியுமோ அதே சமாதானத்தைப் பாரதி பாடல்கள் சிலவற்றிற்கும் கூறமுடியும்.

வயது பதினாறிருக்கும் இளவயது மங்கை—எதற்கு இரண்டு வயது?—இப்படி ஒரு கேள்வி. இப்பாட்டு வரியைப் படிக்கும்போது 'வயது' என்ற சொல் மறைந்துபோய் 'இளமைப் பருவம்' என்னும் சுவை அமுதே நெஞ்சில் ஊற்றெடுக்கிறது. உண்மையான ஒரு சுவைஞனின் உள்ளத்தில் இப்படிப்பட்ட கேள்வி எழவே எழாது. இரண்டு 'வயது,' இப்பாட்டு வரிக்குஇரட்டிப்புஅழகை ஊட்டுகிறது எனலாம். மேலும் இரண்டு 'வயது' இல்லாவிட்டால் இப்பாட்டின் 'வயதே' எப்போதோ முடிந்து போயிருக்கும் என்று கூடத் துணிந்து சொல்லாம்.

'கண்ணம்மா' பாடலில் 'சுவை' என்ற சொல் நான்கு இடங்களில் வருவதைக் குறிப்பிட்டுச் 'சொல் வறுமை' என்று சாடுகிறார் ஆசிரியர். இப்பாடலின் 'சுவை'யே 'சுவை' என்ற சொல்லில்தான் இருக்கிறது. கண்ணம்மாவின் சுவை வெறுஞ் சுவை அல்ல; அது ஊறு சுவை. அள்ளுசுவை; தீஞ்சுவை. சுவையின் சுவையை — ஆழத்தைக் — காண முடியாமல் திணறுகிறான் கவிஞன்; படிப்போரையும் திணற அடிக்கிறான். இது சொல் வறுமை அல்ல; சுவை வளம்.

'உயிர் சென்றாயினும் வலிகுன்றாது ஓதுவது எப்படி? இதுவும் ஒரு கேள்வி. வந்தேமாதரம் ஓதுவதை கவிஞன் தனது உயிர்க் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளான் என்பதையே இப்பாட்டுவரிகள் பறைசாற்றுகின்றன வலியுறுத்துகின்றன வந்தே மாதரத்தில் கவிஞன் கொண்டுள்ள ஆழமான பற்றையும் புலப்படுத்துகின்றன. உயிர் சென்ற பிறகும் ஓதுவேன் என்று 'வெள்ளை'யாகப் பொருள் கொள்வதை—'வேடிக்கை விளையாட்டு' என்று சொல்வதல்லால்வேறென்ன கூறுவது

இந்நூல் எழுப்பும் வினாக்கள் அனைத்திற்கும் சமாதானம் கூறுவதற்கு இங்கே இடமில்லை. 'யாப்பு அறியாத பாரதி' என்ற தலைப்பில் ஆசிரியர் அளித்துள்ள பிழைப் பட்டியலைப் பாரதி ஒரு வரகவி என்று கொண்டாடுவோர் சிறிது மனந்திறந்து காணவேண்டும்.

இறுதியாக இந்நூலின் முயற்சியைப் பாராட்டுகிறோம்; ஆனால் முடிவைமட்டும் சமன் செய்து சீர்தூக்கும் உளங்கொண்ட தமிழ்ச் சீயங்களின் சிந்தனைக்கே விட்டுவிடுகிறோம். —வல்லம் வேங்கடபதி.

# இவையெல்லாம் இவ்வுலகச் செய்திகளே!

## குரங்காய் முடிந்தது!

பழநியம்மாள், பழநியப்பன் ஆனான் என்ற செய்தி வந்தபோது ஒரு பரபரப்பு! ஒரு வியப்புக் குறி!! அதே போல் கண்ணப்பன், கண்ணம்மாளானால் என்ற செய்தி கிடைத்தபோதும் பரபரப்பும், வியப்பும், கொஞ்சம் குறைந்து காணப்பட்டது. பிறகு போகப் போக உடற் கூறு இயலின்படி இது முற்றிலும் சாத்தியமே என்று மருத்துவவல்லுநர்கள் கருத்தறிவித்திருந்தார்கள். பெண் ஆணாவதோ, ஆண் பெண்ணாவதோ முடிந்த ஒன்று தான் என்று நிரூபித்தும் காட்டினார்கள்! ஆனால் காளை மாடு ஒன்றை கறவைப் பசுவாக மாற்றிவிட்ட அற்புதம் ஒன்று இப்போது நிகழ்ந்திருக்கிறது! இந்த அற்புதத் துக்கு தமிழில் ஒரு உவமைகூட இருக்கிறது. அதுதான் பிள்ளையார் பிடிக்கக் குரங்கானது என்னும் பழமொழி. பிள்ளையார் பொம்மை செய்தவர் குரங்கு போல அவ்வளவு அழகாகச் செய்திருக்கிறார் என்று கிண்டலுக்கு எழுந்த பழமொழி இது. ஆனால் எதிர் காலத்தில் இது உண்மையாகும் என்று யாருக்காவது தெரியுமா? கொலம்பியா மாநிலத்தில் பொகோடா என்ற இடத்தில் அரசு கால்நடை மருத்துவர்கள் சிலர், குறைந்த தீவனத்தில் காளைமாடுகளை ஊட்டமுடைய தாக வளரச் செய்யவேண்டும் என்ற திட்டத்தில், காளை மாடொன்றுக்கு பெண் தன்மையை அதிகரிக்கச்செய்யும் ஹார்மோன் சத்துக்களைக் கொடுத்து வந்தனராம்! நாளாக ஆக காளைமாடு, கறவைப் பசுவாகி விட்டதாம்! பெண்தன்மை மிக்க ஹார்மோன் சக்தியினால்தான் இப்படி நிகழ்ந்திருக்கவேண்டும் என்கிறார்கள் அவர்கள்! பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்த கதை பொருத்தம் தானே!

## இன்னும், இன்னும், இன்னும்...

குறைந்த வயதுடைய ஒருவருக்கு, அவருடைய வயதைக் காட்டிலும் அதிகமான குழந்தைகள் பிறக்க முடியுமா? என்பது வினாவின் தன்மையைப் பொறுத்தது மட்டுமல்ல—அது உள்நோக்கமுள்ள வினாவா? என்ப தையும் பொறுத்துத்தான் பதில் கூற முடியும். 30 வயதான ஒருவருக்கு அறுபது குழந்தைகள் இருக்க முடியும்! இதில் அதிசயம் எதுவுமில்லை! அவருக்கு பத்து மனைவியர் இருக்கிறார்கள் என்றால் ஆறே ஆண்டு களில் 30 வயதுடையவருக்கு 60 குழந்தைகள் இருக் கும் என்று கூறிவிட முடியும். கேலிக்காக வினவப்பட் டால் பதிலும் கிண்டல்தானே! தங்கையின் மகனுக்கு அண்ணன் வயதைவிட அதிகம் என்பது முடியுமா என்ன? அதுபோலத்தான் இதுவும்! ஆனால் உண்மை யிலே 60-க்கும் குறைந்த வயதுடைய ஒருவருக்கு 105 பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் வியக்க வேண்டியதுதானே! ஆனால் கூடவே அவருக்கு 35 - மனைவிகள் என்றால் வியப்பதற்கேதுமில்லாமலே போய் விடுகிறது. சராசரி 3 பிள்ளைகள்தானே! இது அதிசய மில்லைதான்! 35 மனைவிகளையும், 105 பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு குடித்தனம் செய்ய முடியுமா? என்பது வேண்டுமானால் பிரச்னையாக இருக்கலாம். சம்பந்தப்பட்டவருக்கு பிரச்னை எதுவும் இல்லை என்ப துடன் இன்னமும் மனைவிகள் தேவை என்றும் எத்த னைப் பெண்களானாலும் மணக்க முடியும்—பிள்ளை பெற முடியும் என்கிறாரே அவர்! சொத்து வசதி எவ்வளவு தான் இருந்தாலும்......சுகம் பெற முடியுமா? முடியும் என்பதுடன், பெண்களே விரும்பி இவரை மணக்க முன்வருவதாக அறிவித்துள்ளாரே! யார் அவர்? அவர் நைரோபியில், தென்நியான்சா என்ற ஊரில் இருக்கிறு ராம்! உயிரோடுதான்! பெரிய பால்பண்ணையே வைத்து நடத்துகிறாராமே!

## நாடே முழுகிப்போகும்!

அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தால், அதன் எதிரொலியாக பைல்கள் முடங்கிப்போவதும், சிவப்பு நாடாவுக்குள் சிக்கிக்கொள்வதும் இயல்புதான்! வேலை நாட்களிலேயே சிவப்பு நாடாவுக்குள் இருக் கிறதே ஏன் என்றால் வேலைப்'பளு' என்றும் சமாதானம் கூறி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு! திருவனந்த புரத்தில், நம்பூதிரிபாட்டின் ஆட்சியில் இவை இரண்டு மில்லாமலேயே ஒரு அதிசயம் நடைபெற்றிருக்கிறது. கேரள அரசின் விவசாய அமைச்சர் எம். என். கோவிந் தன் நாயர், அவர் அண்மையில் துரிதவிவசாய ஏற்பாடு களை முன்னிட்டு கிணறுகளைத் தூறெடுக்கவும், ஆழ் கிணறுகள் வெட்டவும் ரூ. 50 இலட்சம் அனுமதி அளித்தார், நிதித்துறையின் அனுமதிபெற்று, தமது துறையில் அதைப் பயன்படுத்தி வினியோகிக்குமாறு அதற்கான உத்திரவுகளையும் விடுத்தார்! பலன்? சில மாதங்களுக்குப்பின் ஒரு விவசாயம் தொடர்பான ஒரு கூட்டத்தில் அவர் பங்கேற்றபோது ஒரு புதிய காசு கூட இதற்காக யாருக்கும் வழங்கப்படவில்லை என்றும், எந்த ஒரு கிணறும், குளமும் தூய்மைப் படுத்தப்பட வில்லை என்றும் அறிந்து திடுக்கிட்டாராம்! அது மட்டு மல்ல! குட்டநாடு பகுதியில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும்வகையில் ஒரு விவசாயிக்கு ரூ. 25 வீதம் உதவி தருவதற்கு உத்திரவிட்டிருந்தாராம்! அந்த தொகையும் ஒரு விவசாயிக்குக்கூட வழங்கப் படவில்லையாம்!! அரசாங்கம் ஒன்றை அனுமதித்தாலும் சிவப்பு நாடாக்கள் அவற்றை அனுமதிப்பதில்லை என்று அங்கலாய்த்துக்கொண்டாராம்! உணவுத்துறை மட்டு மல்ல, அனைத்துத் துறையும் எப்படி இருக்குமோ என்று நினைத்துப் பார்க்கும்போது கேரளாவைப் பற்றிய அச்சம் ஏற்படாமல் எப்படி இருக்கும்? கேரளாவில் மட்டுமல்ல —எந்த நாட்டில் இப்படி ஒரு நிலைமை இருந்தாலும் அது அந்த நாட்டின் எதிர்காலத்தை விழுங்காமலா விடும்?

ராஜிமணாளன்—தொகுத்தவை.


மாண்புமிகு அமைச்சர்

மா. முத்துசாமி

அவர்களது

**இரஷ்யப் பயணம்**

பற்றிய தொடர் கட்டுரை

விரைவில் காஞ்சியில் வெளியாகிறது.

# முல்லை

புலவர் மு. சுந்தரேசன்

ஆண்பெண்கள் கூடுவதைக் குறிஞ்சி யென்றார்
அவர்பிரியின் பாலையென்றார்; வேறோர் பெண்ணை
ஆண்விரும்பிச் சென்றானேல் ஊடல் கொள்ளும்
அருந்தலைவி நிலைதன்னை மருதம் என்றார்
காண்பரிய நெடுந்தொலைவு சென்ற நெஞ்சக்
காதலர்தம் வருகைக்கு இரங்கி வாடும்
திண்மையிலா நெஞ்சத்தை நெய்தல் என்றார்
திண்மையுள நெஞ்சத்தை முல்லை என்றார்!

போருக்குச் சென்றிட்டு வருவ துண்டு!
பொருள்தேடச் சென்றிட்டு வருவ துண்டு!
பாரினிலே அறந்தன்னைக் காப்ப தற்குப்
படையெடுத்து வென்றிட்டுத் திரும்பல் உண்டு!
வேருடனே கல்விஅறி யாமை போக்கும்
உயர்கல்வி கற்றுவர பிரிவ துண்டு!
தார்வேந்தர் பகைதணிக்கப் பிரிவ துண்டு!
தலைவனவன் இவ்வாறு பிரிதல் உண்டு!

ஓதலுக்கும் தூதுக்கும் காவ லுக்கும்
ஒளிநிறுத்தப் போரினுக்கும் பிரிந்து சென்ற
காதலன்தான் வரும்வழியில் விழியை வைத்துக்
கடும்போரை மனத்துடனே நிகழ்த்து கின்ற
காதலியின் மனநெகிழ்வை நலிந்த நெஞ்சைக்
கடும்பிரிவை ஆற்றுகின்ற வலிமை தன்னை
தீதில்லா நற்புலவர் விளக்க மாக
திறம்படவே பாடியது முல்லை யாகும்!

காரொலிக்கும் வானத்தில்! அதனைப் பார்த்தே
கவின்மயிலோ தோகைதனை விரிக்கும்; எங்கோ
ஓரிடத்தி லிருந்தாயர் குழலி சைக்கும்
ஒப்பரிய அவ்விசைக்குத் தோகை யாடும்!
பாரிலிந்த நாடகத்தைக் கண்ட வானம்
பரிசிலென மழைநீரைக் கொட்டும்; இந்த
ஏரார்ந்த காட்சிதனைக் கண்டு காருக்
கெழில்மலர்கள் மஞ்சத்தை விரித்து வைக்கும்!

நேற்றெல்லாம் பெய்தபெரு மழையால் காட்டில்
நெருங்கியுள செடிகொடிகள் பூத்தி ருக்கக்
காற்றாகத் தேரோட்டும் வளவன் தன்னைக்
கவின்வண்டு துணையோடு தேன ருந்தும்
ஊற்றின்பம் தடைபடா வண்ணம் ஓட்டு!
உவப்புடனே காத்திருப் பாள் என்று கூறும்
காற்றாகப் பறக்கின்ற தேரில் செல்லும்
காதலரின் அருள்நெஞ்சைக் கூறும் முல்லை!

தேர்செல்லும் முள்செல்லும் நெஞ்சம்! நாளை
தொடங்குகின்ற நாடகத்து நினைவு செல்லும்!
ஊர்செல்லும் முன்தலைவி தன்னை நாடி
உவப்புடனே எதிர்நோக்கும் நினைவில் செல்லும்!

சோர்வுற்றுத் தளர்கின்ற முகத்தில் உள்ள
செம்பவள இதழ்நிறத்தில் நினைவு செல்லும்!
ஆர்வமொடு புறாவிரண்டு இணையக் கண்டு
அடுத்ததொரு நாடகத்தில் நினைவு செல்லும்!

செங்கதிரோன் மேற்றிசையில் மறைய, வானம்
செம்பருத்திப் பூக்காடு போலத் தோன்ற
தங்கியுளக் கூடுகளைப் பறவை யெல்லாம்
தம்துணையைத் தம்குஞ்சை நாடி ஓட
எங்கிருந்தோ புல்மேய்ந்த பசுக்கூட் டங்கள்
எழிலான கன்றுகளை நாடும் மாலை!
அங்கமெலாம் உருகச்செய் மாலை! அத்தான்
அழகுத்தேர் வருகைக்கு ஏங்கும் மாலை!

இம்மாலைக் காலத்தே தலைவி யாவாள்
இன்பமுடன் தலைவனையே நோக்கும் காலம்!
வெம்மயலால் உருகுகின்ற காதல் நெஞ்சை
வெங்காமத் தணலினிலும் காக்கும் காலம்!
தம்முடலில் தம்முயிரை வாட்டி வாட்டித்
தூண்டிலிலே புழுவாக ஆக்கும் காலம்!
அம்மாவோ! அவரெங்கோ நானும் எங்கோ
என்றெல்லாம் தலைவன்தேர் நோக்கும் காலம்!

வானகத்தில் முகிலெல்லாம் மொய்த்தா லென்ன?
வண்பிடவும் காயாவும் மலர்ந்தா லென்ன?
கானகத்தே முல்லையெலாம் பூத்தா லென்ன?
கவன்மழையால் தரையெல்லாம்நனைந்தாலென்ன?
ஊனகத்தே உயிரகத்தே வாழும் என்றன்
உயிரனையான் வந்தால்கார் வந்த தென்பேன்!
என்னகத்தான் பொய்யான் இக் கார்கா லந்தான்
என்றுமே பொய்க்குமெனத் தலைவி சொல்வாள்!

பெண்மக்கள் கொண்டிருந்த கற்பாம் மேன்மைப்
பண்புதனைச் சொல்லுவது முல்லை என்று
எண்ணற்க! தமிழ்வீரம் தன்னைச் சான்றோர்
எழில்"மூதில் முல்லை"யென்ற பெயரால் சொன்னார்
கண்போன்ற ஒருமகனைப் போர்க்க னுப்பிக்
களவெற்றி பார்த்தாளே தாயொ ருத்தி
எண்ணரிய உயர்வீரம் கொண்ட அன்னார்
எழிற்சேதி தனைப்புறநா னூறு காட்டும்!

திண்மைசேர் தோள்வலியால் காளை தன்னைத்
திமில்பிடித்துக் கொம்புதனைப் பிடித்த டக்கிக்
கண்ணான காதலியர் தமைம ணக்கும்
கவின்முல்லைத் திருமணந்தான் பண்டை நாளில்
எண்ணற்றோர் மேற்கொண்ட மணமாம்; முல்லை
எனும்நிலத்தில் கிடைத்ததிரு மணமாம்;பெண்கள்
திண்குன்றத் தடந்தோளை நினைத்த தல்லால்
தேடரிய செல்வத்தை நினைத்த தில்லை!

---

**உரைகல்:**

## அண்ணா அறுபது

**ஆசிரியர்:** கவிஞர் க. அரங்கசாமி. விலை 75 காசுகள். வெளியீடு, திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம். சேலம் மாவட்டம்.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது ஆற்றலினை, அண்ணா பண்பு அறுபது அண்ணா அருஞ்செயல் அறுபது, அண்ணா ஆட்சிப் பணி அறுபது, அண்ணா விழைவு அறுபது என்னும் தனித் தனித் தலைப்புக்களில் சிறப்புச் செய்திருக்கிறார் கவிஞர் அவர்கள். கவிஞர் தன் ஆற்றலை அண்ணாவைப் பற்றிய பல நூல்கள் மூலம் நாட்டுக்கறிவித்திருப்பவர்தான். அண்ணாவின் 60-ம் ஆண்டு அகவைத் தொடக்கத்தின்போது படைக்கப்பட்டுள்ள இந்நூல் மிகவும் பயனுடைய ஒன்று, தமிழ் வாழ விரும்புவோர்க்கு! தமிழ் வாழவேண்டும் என்று விரும்புவோர் ஒவ்வொருவர் கரங்களிலும் இந்நூல் இருக்கவேண்டும்!

# கேள்வி ? பதில்

**1. தமிழ் நாட்டில் பிரதான கட்சியாகச் செயல்படுவது காங்கிரசா? இளைஞர் காங்கிரசா?**

அது சுப்பிரமணியத்துக்கும் தெரியவில்லை — காமராசருக்கும் தெரியவில்லை! நமக்கு மட்டும் எப்படி ஐயா தெரியும்! நாட்டு நடப்புக்களில் இருந்து சுப்பிரமணியம் கட்சி கொஞ்சம் அடக்க ஒடுக்கத்தோடு இருப்பதாகத் தான் தெரிகிறது.

**2. பெரியார் ஈ. வே. ரா. அவர்களது பிறந்த நாள் பற்றிக் குறிப்பிடாமலிருந்ததற்கு வருந்துகிறேன்!**

வருந்தாதீர்கள்! 90 வயதை அடைந்துவிட்டவர் பெரியார் அவர்கள்! அவரே அறிவித்திருக்கிற ஒரு அறிக்கை கண்டு கவலையில் சிக்குண்டிருக்கிறோம்! அரசியலும் வேண்டாம் வெங்காயமும் வேண்டாம் என்று அமைதியாக ஒரு இடத்திலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டால்தான், தமிழர்களின் கண்ணீர்ப் பெருக்கைத் தடுத்து நிறுத்த முடியும். அப்படிச் செய்யவேண்டும் என்று தான் பெரியார் அவர்களது பிறந்த நாள் வேண்டுகோளாகக் கேட்டுக்கொள்கிறோம்!

**3. பாரதிதாசனாரின் கனவு ஏதேனும் நனவாகி இருக்கிறதா?**

எந்த நாட்டிலிருந்துகொண்டு இந்த வினாவைக் கேட்கிறீர்கள்? தி. மு. க. ஆட்சியே பாரதிதாசனாரின் கனவு நனவானது போல்தானே. "தமிழறிந்த மூதறிஞர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆதல் வேண்டும்" என்பது அவரது இதய வேட்கையாயிற்றே! "அங்காடி வீதியெலாம் தமிழ் மணக்கச் செய்க" என்று பன்னிப் பன்னிக் கூறிவந்தாரே! என்ன நடந்திருக்கிறது? என்ன நடந்துகொண்டிருக்கிறது! இன்னும் சில காலத்துக்குள் அவரது அனைத்துக் கனவுகளுமே நினைவாகிவிடும் ஐயா, நினைவாகி விடும்!

**4. தமிழ் நாட்டைப்போல பிற மாநிலங்களிலும் இந்திப்பள்ளிகளை மத்திய அரசு தொடங்கப் போகிறதா?**

இல்லை என்றே தெரிகிறது. எனவே, தமிழர்தான் இனி போராட்டத்துக்குத் தயாராகிக் கொள்ளவேண்டும்! தஞ்சை மாவட்டத்திலுள்ள வலங்கைமான், இதற்கு நல்லதொரு உதாரணம்! சில ஊர்களில் சில புல்லுருவிகள் முளைத்திருக்கிறார்கள்! தமிழகத்தின் களங்கமாக!! காற்று கடிதாக வீசும்போது அவர்களது கதைகள் என்ன ஆகும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

**5. குறைந்து கொண்டு வந்த உணவுப் பண்டங்களின் விலைகள் மீண்டும் உயர்ந்துகொண்டு வருவது ஏன்?**

எல்லாப் பண்டங்களுமே விலையேறவில்லை. ஒரு சில மட்டுமே தான். எண்ணெய் வகை போன்றவை! இவை நிரந்தர ஏற்றமல்ல! என்றாலும் காங்கிரசாரின் காலத்தைப்போல மீண்டும் அந்த அளவுக்கு உயர்ந்துவிடாது!

**6. அமெரிக்கக் கல்வி முறைக்கும் இந்தியக் கல்வி முறைக்கும் வேறுபாடு என்ன?**

அமெரிக்கக் கல்வி முறையை, பொதுவாக அந்தந்த மாநிலங்களே நிர்ணயித்துக் கொள்கின்றன. அதோடு அவற்றின் பொதுத் தன்மை, அவரவரும் தன் முன்னேற்றத்துக்குசமவாய்ப்புப்பெறும் ரீதியில் இருக்குமாறு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், இந்தி பேசுவோர்க்கு மட்டுமே இந்தியா சொந்தம் என்ற ரீதியில் இயக்க முயற்சி மேற்கொள்ளப் படுகிறது, சீனாவைப்போல்! சீனக் கல்வி முறை, சீன அரசு, மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதன் எண்ணம் அனைத்தையும் செயல்படுத்தும் கருவியாகவே, கல்விக் கொள்கையைக் கொண்டிருக்கிறது!

**7. நாலாவது ஐந்தாண்டுத்திட்டம் 1969-ல் இறுதியாக்கப்பட்டு விடுமா?**

கொஞ்சம் பொறுத்திருங்கள். இந்திராவின் அமைச்சரவை' முழுமையாக இறுதியாக்கப்படட்டும்!

**8. ஒருநாட்டிலிருந்துஇன்னொரு நாட்டுக்கு நோயாளியாகச் செல்லும் ஒருவரைக் கவனிக்க-சென்ற நாட்டின் அரசு,தனி அதிகாரியை நியமிப்பது என்பது மரபா!**

அப்படி மரபொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. முக்கியஸ்தர்கள் யாரேனும் அப்படிச் செல்லும்போது உரிய வசதிகளைச் செய்துதர ஆணைபிறப்பிப்பதோடு சரி! அண்ணா ஒருவருக்குத்தான் அமெரிக்க அரசு, தனியாக ஒரு அதிகாரியையே நியமித்து ஏற்பாடுகளைக் கவனிக்கச் செய்திருக்கிறது என் அறிவிக்கப்படுகிறது.

**9. மத்திய அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை ஏன் கண்டிக்கிறீர்கள்?**

கண்டிக்க வேண்டிய ஒன்று என்பதற்காக! நாட்டின் நிலை, அரசின் விளக்கம் ஆகியவைகளை அறிந்திருக்கிறோம் என்பதற்காக! ஊழியர்களைப் பலியிட்டு, எந்தத் தலைவரும் தன் தலைமையைக் காத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக! மக்களது வசதிகளும், வரியாகக் கொட்டித் தந்த மூலதனமும் முழுகிவிடக் கூடாது என்பதற்காக! அவர்கள் அரசின் சட்ட திட்டங்களை நிறைவேற்றித் தரும் பொறுப்பைக் கொண்டிருக்கும் அரசு ஊழியர்கள் என்பதற்காக!

**10. தியாகத்தைப் பழித்து அரசியல் நடாத்துவது ஆரோக்கியமான முறையா?**

காங்கிரசுக்காரர்களைக் கண்டிப்பதற்கு நீங்கள் இந்த முறையைத் தானா தேர்ந்தெடுக்க வேண்டும்?

**11. அரியானா அமைச்சர்கள் மூவர் பதவி விலகி இருப்பது எதைப் பிரதிபலிக்கிறது?**

அரியானாவில் காங்கிரஸ் வெற்றிபோது மக்கள் மனம் மாறி விட்டார்கள் என்று காங்கிரசார் கூறினார்கள்! இப்போது கேட்டால், வெற்றி பெற்றவர்களில் சிலர் மனம் மாறிவிட்டார்கள் என்று சொல்லக்கூடும்! அமைச்சரவையில் ஏதோ 'விரிசல்' ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது! கொக்குபோல் காத்திருங்கள், கவிழப்போகும் செய்தியையும் எதிர்பார்க்கலாம்!

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

20 முதல்
தமிழகமெங்கும்
ஜெமினியின்
ஒளி விளக்கு
ஈஸ்ட்மென்கலர்
வசனம்: சொர்ணம் பாடல்கள்: வாலி இசை: எம்.எஸ். விஸ்வநாதன் டைரக்ஷன் சாணக்யா